## இலங்கை பற்றிய 'இந்தியா ருடே'யின் கட்டுரைக்கு தடை!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 15 இதழ் 17
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-2-1995


(கொழும்பு)
'இந்தியா ருடே' சஞ்சிகையின் தமிழ்ப் பதிப்பை இலங்கை அரசு தணிக்கை செய்த பின், இலங்கையில் விற்பனை செய்வதற்கு அனுமதித்துள்ளது.

'இந்தியா ருடே'யின் பெப்ரவரி-28 இதழில் 'இலங்கையின் இன பிரச்னைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையும், ராஜீவ்காந்தியின் படுகொலையும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள அரசியல் கட்டுரை ஆட்சேபத்திற்குரிய ஒன்று என இலங்கை அரசு கருதியதால், அந்தக் கட்டுரை பிரசுரமாகிய ஒரு பக்கத்தை இலங்கைச் சுங்க இலாகா

(2-ம் பக்கம் பார்க்க)

## லண்டன் பத்திரிகை புலிகள் பற்றி கட்டுரை

(லண்டன்)
'த இண்டிபென்டன்ற் ஒவ் சண்டே'' என்ற பிரபல லண்டன் பத்திரிகை தனது நேற்றைய வெளியீட்டில் விடுதலைப்புலிகளின் பெண் புலிகள் பற்றிய முகப்புப் படத்துடன் விடுதலைப் புலிகளின் வீரமிகு போராட்டம் பற்றியும் சித்தரித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும்

# பாரிய புனர்நிர்மாண வேலைக்கு தடைகளை நீக்குவது அவசியம்

## - தலைவர் பிரபா ஜனாதிபதிக்கு கடிதம் -



[யாழ்ப்பாணம்]
வடக்கில் அரசு மேற்கொள்ளவிருக்கும் பாரிய புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளுக்கு தடையாக உள்ள பல விடயங்கள் குறித்து அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கப்பாடு காணவேண்டும். இதன் மூலமே பெரிய அளவிலான புனர்நிர்மாணப் பணிகளை இங்கு மேற்கொள்ள முடியும் என விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

25ம் திகதியிடப்பட்ட இக் கடிதத்தில் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேலும் குறிப்பிடுகையில்-

16 பெப்ரவரி 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைத்தது. நன்றி. உங்களது செயலர் திரு. பலபெத்த பென்டி அவர்களுக்கு, 13 பெப்ரவரி 1995 அன்று ஒரு முக்கிய கடிதம் அனுப்பி வைத்தோம். அதற்கான பதிலுக்கு காத்திருந்த காரணத்தால், உங்களுக்குப் பதில எழுதத் தாமதமாகியது.

திரு. பலபெத்த பென்டி அவர்கள் 25-02-95ம் திகதி திரு. தமிழ்ச்செல்வனுக்கு எழுதிய மிகவும் சுருக்கமான கடிதத்தில், நாம் எழுப்பிய மிகவும் பாரதூரமான விடயங்கள் எதற்கும் பதில் தரவில்லை. மோதல் தவிர்ப்பு உடன்பாடு சம்பந்தமான நடைமுறைகள், கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல, பேச்சுக்களைத் தொடர்தல் போன்ற பிரச்னைகளுக்கும்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் முன்வைத்த பிரச்னைகளை அரசு தட்டிக்கழிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள், அரசாங்கத்துக்கு பல பிரச்னைகள் பற்றி எழுதிய கடிதத்திற்கு அரசாங்கம் பதில் தராது, அனதத் தட்டிக்கழிக்கும் வண்ணம் வேறொரு கோணத்தில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த 16ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா

(4ம் பக்கம் பார்க்க)

## பாண் உற்பத்தி நிறுத்தப்பட்டது

### — வெ. உ. சங்கம் தீர்மானம் —

[யாழ்ப்பாணம்]
மா விநியோகம் சம்பந்தமாக உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்திற்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு மா விநியோகம் சீராக நடைபெறும் என்ற உறுதி கிடைக்கும் வரை தமது அங்கத்தவர்கள் யாவரும் வெதுப்பி

(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு சந்திரிகா தீர்வுகாணமாட்டார்: மக்கள் கருத்து மாறுகிறது

### சந்தேசிய கூறுகிறது

(கொழும்பு)
இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு சந்திரிகா அரசாங்கத்தால் எட்டப்படும் என்று பொதுமக்கள் மத்தியில் இருந்த எண்ணங்கள், தற்போதுமனத்திரையில் இருந்து விலகி வருவதாக பி. பி ஸி. சந்தேசிய கொழும்பு நிருபர் எல்மோ பெர்ணாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்து 100 நாட்கள் முடிவ

(4ம் பக்கம் பார்க்க)

தமிழகத்திலிருந்து வரும் அகதிகளுக்கு

## இந்திய கடற்படையும் ஹெலியும் பாதுகாப்பு

[சென்னை]
தமிழகத்திலிருந்து இன்று தாயகம் நோக்கி புறப்படும் தமிழ் அகதிகளுக்கு இந்திய கடற்படையும், இந்தியஹெலிகொப்டர் ஒன்றும் பாதுகாப்பு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலிருந்து எம். வி.

(2ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா டென்மார்க் செல்கிறார்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா அடுத்த மாதம் முற்பகுதியில் டென்மார்க் செல்லவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க் தலைநகர் கொபன்கேகனில் மார்ச் 6ந் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை நடைபெற இருக்கும் சமூக அபிவிருத்திக்கான உலக உச்சிமாநாட்டில்கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா டென்மார்க் செல்லவுள்ளார்.

-ம-சி

## நாலாம் கட்டப் பேச்சுக்கள் இவ்வாரம் நடைபெறாது

(கொழும்பு)
அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 4வது கட்டப் பேச்சு, மார்ச் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை நடைபெறலாம் என முதலில் கூறப்பட்டபோதிலும், அதற்கான சாத்தியங்கள் வெகு குறைவாகவே காணப்படுகிறதாம்.

சமாதானப் பேச்சுக்களில் எழுந்துள்ள சில சிக்கல் நிலை காரணமாகவே, அடுத்த கட்டப் பேச்சுக்கள் மேலும் தாம

(4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்தெற்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் இசைக் கச்சேரி, கதாப்பிரசங்கம், கூட்டுப் பிரார்த்தனை, பக்திப் பாடல் போன்றவை இடம்பெறவுள்ளன.

0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி பஜனை- கூட்டுப் பிரார்த்தனைகளும், நற்சிந்தனைகளும் 4 ஜாமப் பூசை வழிபாடுகளும் இன்று நடைபெறும். 154

0 0

(அரியாலை)

சிவராத்திரி விழாவையொட்டி இன்று இரவு யாழ். பழைய பஸ்நிலையம் ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில் நான்கு சாமப் பூசைகளுடன் திருமுறைப் பேருரை, பக்திகான இன்னிசை விருந்து, பட்டிமன்றம் சமய ஞான வினவிடை அறிவுக்களஞ்சியம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன, 59

0 0

(சொழும்புத்துறை)

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேய்ச்சியம்பாள்) கோவிலில் இன்று மகாசிவராத்திரி புண்ணிய தினமாகிய நாளில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடும் பஜனை-கூட்டுப் பிரார்த்தனையும், 'சிவராத்திரியின் மகிமை' பற்றி சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். 154

0 0

(கொழும்புத்துறை)

யாழ். பாண்டியன் தாழ்வு ஸ்ரீநரசிம்ம ஞானவைரவர் ஆலயத்தில் இன்று மகா சிவராத்திரி விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். 154

0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி ஞானவைரவர் கோவில் சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகஆராதனையும் பண்ணிசை இன்னிசை சககச்சேரி, மங்கள இசை போன்றவையும் விழாவில் நடைபெறவுள்ளது.

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி பூசை, வழிபாடும், நான்கு ஜாமப் பூசை ஆராதனைகளும் இடம்பெறும், 154

0 0

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தாளையடி வீதி ஐயனார் ஆலயத்தில் சிவராத்திரி விழா விஷேட அபிசேகத்துடன் இன்று நடைபெறவுள்ளது இன்றைய விசேட நிகழ்ச்சிகள் சொற்பொழிவு, பட்டி மன்றம், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம்பெறும்.

# தமிழகமீனவரின் இடையூறல் எமது மீனவர் கஷ்டமுறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

''கடல் வலயச் சட்டம், ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டதினால் மீன்பிடித் தொழிலில் சற்று உற்சாகம் பிறந்துள்ள இவ்வேளையில், தமிழக மீனவர்களின் இடையூறுகள் தொடர்ந்தும் இருப்பதே எமக்குப் பெரும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்துகின்றது.''

இவ்வாறு குருநகர் மீன்பிடிச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணத்து மீனவர்கள் தற்போது ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பதால், பெருமளவு மீன்களைப் பொது மக்கள் மலிவு விலையில் வாங்கக்கூடியதாக இருக்கிறது.

கடற்படையினரின் கெடுபிடிகள் கடற்பரப்பில் சற்றுக் குறைந்துள்ள போதிலும் தமிழக மீனவர்களின் இடையூறுகள் இன்னும் குறைந்தபாடில்லை. இவர்கள் ரோலர் படகுகள் மூலம் கூட்டம் கூட்டமாக எமது கடற்பரப்புக்குள் ஊடுருவி வந்து மீன் பிடிப்பதுடன், எமது மீனவர்களின் வலைகளையும் திருடிச் சென்று விடுகின்றனர்.

இரவு வேளைகளில் இவர்கள் எமது கடற் பரப்புக்குள் ஊடுருவி மீன் பிடிப்பதை, இலங்கைக் கடற்படையால் இனம் கண்டுகொள்ளமுடியாது போய்விடுகிறது.

தமிழக மீனவர்களின் ஊடுருவல் எமது கடற் பரப்பில் தடுக்கப்பட்டால், நாம் மேலும் கூடுதலான மீன்களைப் பிடிக்கலாம் என்றார். வ்-சி

## ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலையில் சேவை மூப்பில் இளையவர் ஒருவர் நியமிக்கப்பட்டதனை சேவை மூப்பு கூடிய உத்தியோகத்தர்கள் ஆட்சேபித்துள்ளதுடன் அப்பதவி சேவை மூப்பின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும் எனக்கோரி சுகாதார அமைச்சுக்கு மேன்முறையீடும் செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சிலிருந்து உரிய பதில் கிடைக்கும்வரை குறிப்பிட்ட நியமனத்தை நடைமுறைப்படுத்துவதைதற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் யாழ். போதனு வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இரத்மலானையில் விமான விபத்து

## விமான ஓட்டி படுகாயம்

(கொழும்பு)

உபாலி நிறுவனத்துக்குச் சொந்தமானவிமானமொன்று நேற்று நண்பகல் இரத்மலானையில் தொழிற்சாலை ஒன்றில் வீழ்ந்து நொருங்கியது.

இதனுல் தொழிற்சாலை சேதத்துக்குள்ளாகியது.

தொழில் நுட்பக்கோளாறினுல் இந்த விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின்சீனநாட்டைச் சேர்ந்த விமான ஓட்டி கடும் காயங்களுக்குள்ளாகி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். -இ

# பனை வெல்ல உற்பத்தி மார்ச் முதல் ஆரம்பம்

[பண்டத்தரிப்பு)

சங்கானை பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் இவ்வருடத்திற்கான பனை வெல்லம் உற்பத்தியை எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக சங்க அங்கத்தவர்களிடமிருந்து பதநீரை கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும், இவ்வருடத்தில் சுமார் 30 ஆயிரம்கிலோ நிறையுள்ள பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு சங்கம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் பொது முகாமையாளர் திரு. செல்வராசா தெரிவித்தார். .72-சி

# சுதேசிய கைத்தொழில்; இலங்கைவங்கிகடன்

(உடுவில்)

சுதேசியக் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன், இலங்கை வங்கியின் சுன்னுகம் கிளை கடன் வழங்க முன்வந்துள்ளது.

இலங்கை வங்கியினுல் நடைமுறைப்பட்டுவரும் சுயதொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் இக்கடன் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற் கட்டமாகச் சுளகு பின்னும் குடிசைக் கைத்தொழிலுக்கென மாகியப்பிட்டிக் கிராமத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பது குடும்பங்களுக்குக் கடனுதவி வழங்கப்பட உள்ளது.

சுளகு பின்னும் குடிசைக் கைத்தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேருக்கு இத்திட்டத்தின் அடிப்படையில் தலா 5,000 ரூபா இலங்கை வங்கியின் சுன்னுகம் கிளையினுல் அண்மையில் வழங்கப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் எம். சண்முகசுந்தரம் வைபவ ரீதியாக இக்கடன்களைக் கையளித்தார். 139-சி

# நடமாடும் செயலக சேவையில் அன்பளிப்பு

(உடுவில்)

போஷாக்கு குறைவால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட முப்பத்தைந்து குழந்தைகளுக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரால் இலவசமாக ஜீவாகாரம் வழங்கப்பட்டது.

அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பிரிவில் நடைபெற்ற நடமாடும் செயலக சேவையின் போது இவை வழங்கப்பட்டன.

மேலும் இப்பகுதிகளில் இடம் பெயர்ந்து வறுமை நிலையில் வாழும் நான்கு குடும்பங்களுக்கு அரிக்கன் விளக்குகளும் பதின்நான்கு குடும்பங்களுக்கு வாளிகளும், ஊனமுற்ற ஒருவருக்கு ஊன்றுகோலும் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அத்துடன் தேசிய அடையாள அட்டைபெறுவதற்காக 112 பேருக்கு வேண்டிய புகைப்படங்களும் இலவசமாக எடுக்கப்பட்டது.

சுகாதார திணைக்களத்தினரால் 78 சிறுவர்களுக்கு பூச்சி மருந்து வழங்கப்பட்டது. (109)

# இளைஞர்களுக்கு சுயதொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்பு இல்லாது இருக்கும் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி கொடுத்து அவர்கள் சுயமாக வேலைத்தேடி வருவாயைத் தேடிக் கொள்ளும் முகமாக உதவி வருகிறது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யூனிரெக் பொறியியல் நிறுவனம்.

தற்பொழுது இந்த நிறுவனத்தில் பல இளைஞர்கள் பல துறைகளில் பயிற்சிபெற்று வருகிருர்கள். இவர்களுக்கு மரக் கடச்சல், உலோகக கடச்சல், மின் ஒட்டுதல், உருக்கைக் காச்சி அடித்தல், மரவேலைகள், தீந்தை அடித்தல் பொலிஷ்செய்தல் போன்ற வேலைகளில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரையான பயிற்சிக்காலத்தில் ஒரு உதவுத்தொகையும் இவர்களுக்குக்கொடுக்கப்படுகிறது. தேர்ச்சி பெற்ற பின் இந்த இளைஞர்களுக்கு நல்லதொழில் வாய்ப்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. —இ

## தமிழகத்திலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராமானுஜம் என்ற கப்பலில் இன்று முதல் தொகுதியாக 500 தமிழ் அகதிகள் மன்னுர் நோக்கிப் புறப்படவுள்ளனர்.

இதைதொடர்ந்து கட்டம் கட்டமாக சுமார் 8000 தமிழ் அகதிகள் மன்னுருக்கும், திருமலைக்கும் வந்துசேர்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நல்லின புல் வகைகள் வெளிநாட்டிலிருந்து தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

விலங்கு வேளாண்துறையை மேம்படுத்தும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, நல்லினப் புல் வகைகளான கொமன்கினி, மருளிகினி, பயோலா ஆகிய புல் விதைகள் வெளிநாட்டிலிருந்து பெற்று நடுகை செய்யப்பட்டுள்ளன.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணையில் பரீட்சார்த்தமாக மேடைகளில் விதைக்கப்பட்ட இப்புல் வகைகள், தற்போது நல்ல செழிப்பான முறையில் வளர்ந்துள்ளன.

ஏற்கனவே நெப்பியர் இனப் புல்லினங்கள் நல்ல தீவனமாக அமைந்துள்ளதுடன் புதிதாகத் தருவிக்கப்பட்ட இப்புல்லினங்களையும் மக்கள் மத்தியில் அறிமுகம் அடையச்செய்யும்நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

## இலங்கை பற்றிய

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினர் தணிக்கை செய்துள்ளனர்.

ராஜீவ் கொலை வழக்கில் புலிகள தலைவர் பிரபாகரன் முதன்மைக் குற்றவாளி என இந்திய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் சாத்தியக்கூறு அதிகம் என்றும், இவ்வேளையில் பிரபாகரனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசை இந்திய அரசு கோரும் பட்சத்தில் அது இலங்கை அரசுக்கு, புலிகளுடனுன சமாதானப் பேச்சு விடயத்தில் பெரும் நெருக்கடியை உருவாக்கும் என 'இந்தியா ருடே' வெளியிட்டிருக்கும் கட்டுரையையேஇலங்கைஅரசு தணிக்கை செய்துள்ளது.

இதன் மூலம் அரசுக்கும்-புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில், உலகில் உள்ள எந்தவொரு வெளிச் சக்தியையும் அனுமதிப்பதில்லை என்டதில் இலங்கை அரசு தனது தீவிரத்தை வெளிப்படுத்தி இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். -சி

## தெற்கில் தடுத்துவைக்கப்பட்டுள்ள

# தமிழ் கைதிகளின் மனநிலை பாதிப்பு

(கொழும்பு)

தென்பகுதி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிறைகளில் உள்ள தமிழ் கைதிகளுக்கு அடிப்படைவசதிகள் யாவும் மறுக்கப்பட்டுவருவதால் அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

காலைக்கடன் கழிப்பது உட்பட பல அத்தியாவசிய தேவைகளுக்கு கூட குறுகிய நேரமே இக்கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இச்சிறைகளிலுள்ள சிங்கள கைதிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவிகள் மற்றும் சலுகைகள் எதுவும் தமிழ் கைதிகளுக்கு வழங்கப்படுவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. ரி-இ

### மணிவாக்கு

என்றும் எவ்விடத்தில் எல்லோராலும் நம்பப்படுவது எதுவோ அது தவருக இருப்பதற்குப் போதுமான காரணமுண்டு.

-டென்னிசன்

# பாதை திறப்பு கோரிக்கையை முழுமையாகஏற்பதாகஇல்லை

## பி. பி. ஸி. கருத்து

(லண்டன்)

ஆனையிறவு - பூநகரி பாதை திறப்பு தொடர்பாக இலங்கை அரசின் அறிவிப்பானது, பூநகரி இராணுவ முகாமை முற்ருக மூடிவிட வேண்டும் என்ற புலிகள் விடுத்த கோரிக்கையை முழுவதாக ஏற்பதாக அமையவில்லை என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

அரசின் இந்த அறிவிப்பானது புலிகளுக்கு அளிக்கப்பட்ட ஒரு சலுகை போலவே தோன்றுகிறது என்று செய்தி முகவர்கள் கூறியதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

இரு பகுதியினருக்கும் மிடையே தற்போது மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலில் உள்ளது. நிரந்தர அமைதி ஏற்பட பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

க-ரி

# நமது நோக்கு

### இராணுவ ஊழல்

இராணுவத்தின் முன்னுள் அதிகாரிகள் தளபதிகளுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

பணமோசடிகள், ஒழுங்கீனங்கள் போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் இந்த அதிகாரிகளிற் சிலர் நாட்டுப்பற்றுள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டதும் ''நாட்டைக்காப்பாற்றுவோம்'' என்றெல்லாம் முழக்கமிட்டதை நாம் மறப்பதற்கில்லை.

குறிப்பாக ஒரு தளபதி அநுராதபுரத்தில் நடைபெற்ற படையினர்ஆண்டு விழாவில் நாட்டைக்காக்கும் தலைவராகத் தம்மைக் கணித்துக்கொண்டு பேசிய அரசியற் பேச்சினை நாடு அதற்குள்ளாகவா மறந்து விடும்?

போதிமர நிழலிலிருந்து போதனை செய்தால் மக்கள் போற்றுவர் என்ரு கணித்திருந்தார்? ஊருக்கிளைத்தவன்பிள்ளை யார் கோவில் ஆண்டி!'' என எண்ணிக்கொண்டு தமிழர்களை அடக்கி ஒடுக்குவதே தலையாய கடமை என்று கூறி அப்பாவித் தமிழர்கள் மீது ஏவிவிட்ட கொடுமைகளை யார் மறப்பார்கள்?

போரைத் தொடர்வதில் அவர்கள் காட்டிய அக்கறையின் தாற்பரியம் இன்று உணரப்படுகின்றது.

எதிரியின் பலத்தைக் குலைக்கப் பல நவீன கருவிகள் வாங்கப்பட்டிருந்தன.

அவை முறையாக இயங்கவில்லை என்பது மாத்திரமல்ல அவை வாங்கப்பட்ட விதமும் முறைகேடானது என இன்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வழமையான அரச நிதிப்பிரமாண விதிகள் காற்றிற் பறந்துள்ளன; கேள்விப்பத்திர ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தான் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது பாதுகாப்பு அமைச்சர் நிதி ஒதுக்கீடு பற்றிப் பேசிய அமைச்சர் மங்கள சமரவீர கூறியது கவனத்திற்குரியது.

யுத்தத்தை வியாபாரமாக்கி சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறுர்கள் எனப் படையினரைக் குற்றம் சாட்டிப் பேசியிருப்பது அரசுக்கும் பல விஷயங்கள் புரிகிறதுஎன்பதையா காட்டுகிறது?

# கிழக்கில் இராணுவத்தினரால் மோதல் தவிர்ப்பு மீறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் மோதல் தவிர்ப்பை மீறும் செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன் ஆத்திரமூட்டும் செயல்களிலும் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகளின் ஆயுதங்களை பறித்து வைத்திருப்பதுடன் அவற்றை திருப்பி தருவதில்லை. சுற்றிவளைப்புகள் நடைபெறுகிறது. பலர் கைது செய்யப்படுகிறுர்கள். பொது மக்கள் அச்சுறுத்தப்படுகிறுர்கள், உணவுக்கட்டுப்பாட்டால் மக்கள் அவதிப்படுகிறுர்கள், உணவு முத்திரையில் ஒரு கிழமைக்கு தேவையான, ஒரு குடும்பத்திற்கு ஏற்ற அளவு பொருட்களையே விடுகிறுர்கள்.

எமது போராளிகள் ஆயுதமின்றி செல்லும்போது பிடித்து அடித்து, துன்புறுத்தி பல ஆத்திரமூட்டும் வேலைகளில் படையினர் ஈடுபட்டு வருகிறுர்கள் என்றும் தெரிவித்தார்.

சி-ரி

# "மல்லிகை என்ற தனிமரம் தோப்பாகி இருக்கின்றது"

## பாராட்டு விழாவில் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

'தனிமரம் தோப்பாவதில்லை. மல்லிகை என்ற தனி மரம் தோப்பாகி இருக்கின்றது.'' இவ்வாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா போல் தெரிவித்தார்.

டொமினிக் ஜீவாவின் 30 வருடகால சஞ்சிகை வெளியீட்டையும், மல்லிகை'யின் 30ஆண்டு மலர் வெளியீட்டையும் பாராட்டி யாழ். பிரதேச செயலக கலாச்சாரப்பேரவையினுல் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: எத்தனையோ போராட்டங்களை, எதிர்நீச்சல்களை, சோதனைகளை தாங்கி மல்லிகை தொடர்ந்து வெளிவருகின்றது. மல்லிகையில் எழுதப்படும் தலையங்கங்கள் மிகவும் உன்னதமாக எழுதப்படுகின்றன. தானே எழுத்தில் இருந்து ஒதுங்கி மற்றவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் சிறப்பியல்பு ஜீவாவுக்குரியது'' என்ருர்.

கலாநிதி குணராசா (செங்கை ஆழியான்) பேசுகையில்: ஜீவாவை இரண்டு முகங்களாகத் தரிசிக்கிறேன். ஒன்று டொமினிக் ஜீவா; மற்றது மல்லிகை ஜீவா. டொமினிக் ஜீவா தான் வரித்துக்கொண்ட கோட்பாட்டில் விலகாது கொண்ட கொள்கையாளனுக இருக்கின்ருர். மற்றவடிவான மல்லிகை ஜீவாவோ தனக்கு ஒரு சமூகப் பொறுப்பு உண்டு. என்ற வகையில் பலதரப்பட்ட கோட்பாடுகளை கொண்டவர்களின் ஆக்கங்களுக்கு மல்லிகையில் களம் அமைத்துக் கொடுப்பவர் என்ருர்.

விழாவில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் நா. சுப்பிரமணிய ஐயர், கோகிலா மகேந்திரன் ஆகியோரும் மல்லிகை பற்றி கருத்துரை வழங்கினுர்கள். மல்லிகையின் 30வது ஆண்டு மலரை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ. சிறில் பெற்றுக்கொண்டார்.

ம-சி

### பலதும் பத்தும்

#### எந்தக் கிரகம்?

ஒருவர் எந்தத்துறையிற் சிறப்படையலாம் என்பதைக்கூட கிரக நிலைகளால் அறியலாமாம்!

கணிதம், வர்த்தகம், நாடகம், தூதுபோதல் ஆகியவற்றிற்குப் புதனும், சட்டம், வான சாத்திரம் போன்றவற்றிற்கு வியாழனும், இசை, ஓவியம் போன்ற அழகியல்துறைக்கு வெள்ளியும், இயந்திரங்கள் இரும்பு போன்ற கூரிய பொருட்களின் வியாபாரம ஆகியவற்றிற்குச் சனியும், மருத்துவம் அரசதொழில்களுக்குச் சூரியனும் இலக்கியம் பல மொழிக்கல்வி, மூளையாற் செய்யும் தொழிகளுக்குச் சந்திரனும் புவியில் கட்டடம். ஆயுதங்கள் போன்றவைகட்குச் செவ்வாயும் உதவும்.

அணுவியல். தொலைத் தொடர்பு, விஷ வைத்தியம், மந்திரம் போன்றவற்றிற்கு ராகுவும் வைத்தியம். தத்துவம் ஆகியவற்றிற்குக் கேதுவும் உதவும்.

கிரகத்தின் வலிவு நிற்குமிடம்பெறும் பார்வை ஆகியவற்றை அறிந்து தான் சோதிடர்கள் கூறுவார்களாம்!

— மயூரன்

யாழ். மாநகரசபைக்கு

# சூரிய ஒளியில் இயங்கும் 3 மின் உற்பத்தி கருவிகள்

[கொழும்பு]

சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்று வழங்கிய மூன்று சூரிய ஒளியில் இயங்கும் மின் உற்பத்திக் கருவிகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக் கருவிகள் யாழ்.மாநகர சபையால் நிர்வகிக்கப்படும் குடும்பநல நிலையங்கள், மகப்பேற்று நிலையங்கள் நூலகங்கள் ஆகியவற்றுக்கு மின்வசதி வழங்கவே அனுப்பிவைக்கபட்டுள்ளன.

ம-ரி

# லான்ட்மாஸ்டர் சில்லில் நசியுண்டு சிறுமி மரணம்

(நெல்லியடி)

ஓடிக்கொண்டிருந்த லான்ட்மாஸ்டரிலிருந்து குதித்த ஒன்பது வயது பெண் சிறுமி ஒருவர் அதன் சில்லில் அகப்பட்டு நசியுண்டு, மந்திகை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டவேளை இரவு மரணமாஞர்.

இப்பரிதாப சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணியளவில், இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது.

இமையாணன் அ. த. க. பாடசாலையின் 4ம் ஆண்டு மாணவியான இரத்தினம் பிரிந்தா (வயது 9) என்னும் சிறுமியே இவ்விதம் மரணமானவராவார்.

இதுசம்பந்தமான மரண விசாரணையை நடாத்திய உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராசா, விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

160-ரி

### பரீட்சை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை தொலைக்கல்வி நிலையத்தில் ஆசிரியர் பயிற்சியை மெற்றுக்கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களும் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக இன்று 27ம் திகதி ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு விபரங்களுடன் சமூகமளிக்குமாறு சிரேஷ்டயோதஞசிரியர் கேட்டுக் கொணடுள்ளார்.

-இ

# இராசி பலன்

27-02-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி -15)

திரயோதசி மு. இ. 7-56 வரை, திருவோணம் ந. இ. 12-25 வரை, அமிர்தசித்த யோகம், பிரதோச விரதம், கரிநாள் இராகுகாலம் காலை 7-59 முதல் 9-29 வரை, சுபவேளை பகல் 12-29 முதல் 1-59 வரை.

மேடம்: தெய்வீகப்பணி, மனமகிழ்ச்சி, தாயன்பு.

இடபம்: கடன் தொந்தரவு, மனசங்கடம், மாமஞர்பகை.

மிதுனம்: குடும்ப பகைமை, தொழில் நஷ்டம் குறுகிய சிந்தனை.

கடகம்: விரோதிகளை ஜெயித்தல், பணவரவு, முயற்சி பலிதம்.

சிங்கம்: சுபகாரியம். வாழ்க்கைச்சுகம், மஞேதிடம்

கன்னி: நிம்மதிக்குறைவு, பணியாள் தகராறு, அலைச்சல்.

துலாம்: முரண்பாடுகள், வழித்தொல்லை, உடல்அசதி.

விருச்சிகம்: புத்திரர் பெருமை, வருமானப் பெருக்கு, மகிழ்ச்சி.

தனுசு: தாயாரிடம் வேற்றுமை, ஆக்ரோஷம், அகால உணவு.

மகரம்: குடும்பசௌகரியம், சகோதர உதவி, கலகலகப்பு.

கும்பம்: குதர்க்க வாதம், தொழில் கவலை, தெளிவற்ற நிலை.

மீனம்: செல்வாக்கு, மேலதிகாரிகள் ஆதரவு, வேறுபாடு நீங்குதல்.

— ஜோஸ்யர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-27

திங்கள் இரவு

08-01 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்களின் தேசம்
08-30 செய்திகள்
08-40 தரிசனம்- நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் அரியாலையூர் சபாபதிப் பிள்ளை பாலசிங்கம் அவர்களுடனுனசெவ்வி இடம்பெறும்.

1995-02-28

செவ்வாய் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள் என்பன இடம்பெறும்

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-02-27

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்குச் சிலவிஞடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

காடும் கனிவாக வளர்ந்திடவே
நாடும் நலமாய் ஓங்கிடுமே.

# அகதிகளை மீளக் குடியமர்த்த அரசு விரிவான திட்டம்

## நிதி உதவியும் அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து போரின் காரணமாக வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாக அகதிமுகாம்களில் வாழும் மக்களை துரிதகதியில் மீளக்குடியமர்த்த விரிவான திட்டமொன்றை அரசு தயாரித்துள்ளதாம்.

அகதிகளின் மீளக்குடியமர்வை ஊக்குவிக்குமுகமாக அவர்களுக்கான நிதி உதவிகளை முமமடங்காக அதிகரிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

அகதிகளுக்கு மீளக்குடியமர்வின் போது வழங்கப்பட்டு வந்த தவணைப்பணம் 500 ரூபாவிலிருந்து 7000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காணியை துப்பரவு செய்வதற்கான உபகரணங்களை வாங்குவதற்கு இனிமேல் ஒரு அகதிக்குடும்பத்திற்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும். இதுவரை இதற்காக பணம் எதுவும் வழங்கப்படவில்லை. வீட்டு உபகரணங்களை வாங்க 2000 ரூபா வழங்கப்படும்

வீட்டை மீளக் கட்டுவதற்கு இதுவரை அகதிக்குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுவந்த 15,000 ரூபா 25,000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. மேலும் இதற்கென 25,000 ரூபா கடனும் வழங்கப்படவுள்ளது. -சி

# ★ நாடு முழுவதும் கிராமசேவகர் பிரிவு 8000 ஆக குறைப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் தற்போது இருக்கும் 14,000 கிராம உத்தியோகத்தர்கள்பிரிவுகளை 8000 பிரிவுகளாகக் குறைப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, இதுவரை 300 முதல் 500 வரையான குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். இனிமேல் நகரப் பகுதிகளில் 1000 குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தரும், கிராமப் புறங்களில் 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தரும் நியமிக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் சுற்று நிருபங்களை அனுப்பி வைத்திருக்கின்றது. -ம-சி

# வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அளிக்கவில்லை. இந்தப் பிரச்னைகள் எல்லாவற்றையும் ஓரம் கட்டிவிட்டு, வடக்கில் வாழும் தமிழ் மக்களின் அன்ருட அவலங்களைப் போக்கும் வகையில் அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டதாக அவர் மிகைப்படுத்திக் கூறுகிருர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், வட மாநிலத்திற்கும் மத்தியில் பாதை ஒன்றைத் திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிருர்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும். இந்த முக்கிய விடயத்தில் எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்துவிட்டு, பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் மக்களுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதாக, ஒருதலைப்பட்சமான முறையில் அவர் அறிவித்தல் ஒன்றையும் விடுக்கின்ருர். இது அரசின் பழைய பல்லவிதான். இந்த அறிவிப்பானது பொய்யான பிரசார இயக்கத்திற்கு உதவலாமே தவிர, சமாதானச் சூழலை முன்னெடுக்க உதவப்போவதில்லை. இதையிட்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த ஒருதலைப்பட்சமான அறிவிப்பு ஒரு விடயத்தைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது, பரந்துபட்ட தமிழ் மக்களின் அவசரத் தேவைகளுக்கு மேலனதாக, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தின் போர்த்தந்திரோபாய நலன்களுக்கே அரசாங்கம் முதன்மை கொடுக்கிறது.

பொருளாதாரத் தடைகள் முற்றுக நீக்கப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பெற்ருேல், டீசல் வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், உரவகைகள், பற்றரிகள் போன்ற எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்விற்கு அத்தியாவசியமான பொருள்கள். அனைத்தும் இராணுவப் பண்டங்கள் என்ற முத்திரை குத்தி தடுத்துவைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, தடைநீக்கப்பட்டதாக கூறப்படும், பொருட்கள்கூட வவுனியாவில் இராணுவத்தினர் தம்பாட்டில் திணிக்கும் தடைகளால் மக்களை வந்தடைவதில்லை. இதுதான் உண்மையான எதார்த்தநிலை. இந்த உண்மை நிலையை வடக்கிலுள்ள எமது மக்கள் நன்கு அறிவார்கள். நிலைமை இப்படியிருக்க, சகல அத்தியாவசியப் பொருட்கள் மீதுள்ள தடைகள் நீக்கப்பட்டு விட்டதாக திரு. பலபத்தபென்டி அவர்கள் எமக்கு அறியத்தருகிருர். உண்மையைத் திரித்துக் காட்டும் இத்தகைய பொய்ப் பிரச்சாரங்கள் எமது மக்களின் துன்பத்தை துடைத்துவிடாது சமாதான நலனையும் பேணிவிடாது.

தற்போதுள்ள தற்காலிக மோதல் தவிர்ப்பு நிலையை ஒரு முழுமையான, உறுதியான போர் நிறுத்தமாக யாற்றும் விடயத்தில் அரசாங்கம் காட்டும் அசமந்தப் போக்கு எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இது குறித்து நாம் பல கடிதங்களை அரசுக்கு எழுதியிருக்கிருேம். மோதல் தவிர்ப்பு ஒழுங்குமுறை சம்பந்தமாக எழுந்துள்ள பல்வேறு சிக்கல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் நாம் விளக்கம் கோரிய போதும் அரசாங்கம் இதுவரை உருப்படியான பதிலேதையும் தரவில்லை. அரசாங்கத்தின் அக்கறையீனமான போக்குக்காரணமாக, வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை உருவாக்குவதில் பெரும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. சமாதானத்தை பேணுவதில் இந்தக் குழுக்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இந்த பாரதூரமான விடயங்களை தீர்த்து வைக்க அரசாங்கம் தவறுமாஞல், சமாதான சூழ்நிலைக்கு இது பெரும் பங்கம் இழைத்துவிடும்.

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள்மீதான தடை நீக்கப்படுவது. யாழ்ப்பாணத்திற்கான பாதை திறக்கப்படுவது, போர்நிறுத்த நிலைமையை பலப்படுத்தப்படுவது ஆகியன. வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கு அத்தியாவசியமானவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவேதான், இந்த விடயங்கள் குறித்து விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு மூலம் இணக்கப்பாடு காண வேண்டும். அப்படியான தொரு இணக்கப்பாடு ஏற்பட்டால் தான் பெரிய அளவிலான புனர்நிர்மான திட்டங்களை செம்மையான முறையில் செயற்படுத்துவது சாத்தியமாகும்.

புனர்நிர்மாண வேலைகளை திட்டமிட்டு செயற்படுத்த தகுந்த அதிகாரங்கள் கொண்டதாக ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அதில் அரசபிரதிநிதிகளும், புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் கடந்த சுற்றுப் பேச்சின் போது விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளை அரச தரப்பினர் ஏற்றுக் கொண்டனர். எனவே பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்றும், அதன்மூலமே புனர்நிர்மாணம் செவ்வனே செய்ய முடியும் என்பதையும் நாம் வலியுறுத்துகிருேம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-சி)

## புலிகள் முன்வைத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார் அந்தக் கடிதத்தில், யாழ்ப்பாணத்தில் சில புனர்நிர்மாண வேலைகளைச் செய்யப் போவதாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இது ஒரு சுருக்கமான கடிதம் ஆகும்

இதற்கிடையில் விடுதலைப் புலிகள் திரு. பலபத்தபென்டிக்கு 13ம் திகதி ஒரு நீண்ட கடிதத்தை எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தில் பல பிரச்னைகள் பற்றிக் குறிப்பட்டிருந்தது. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் சம்பந்தமாகவும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், சமாதானக் குழுவை நியமிப்பதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கு சம்பந்தமாகவும், விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் சுமத்தியிருக்கும் போர் நிறுத்த மீறல்கள் சம்பந்தமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு, விளக்கங்கள் கோரி ஒரு நீண்ட கடிதம் அனுப்பப்பட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் [illegible] பலபத்தபென்டிக்கு இக்கடிதத்தை அனுப்பியிருந்தார்.

அத்தோடு பேச்சுவார்த்தைகளை உடனடியாக தாமதிக்காது ஆரம்பிக்கவேண்டும். இனப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி அந்த நீண்ட கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்துக்கு எந்த விதமான பதிலும் இல்லாமல் ஜனாதிபதி சந்திரிகா திடீர் என்று ஒரு கடிதத்தை தலைவருக்கு எழுதியிருந்தார். திருமதி சந்திரிகாவின் கடிதத்தில் பலபத்தபென்டிக்கு எழுதப்பட்ட எந்தவித பிரச்னைக்கும் பதில் இல்லாமல், குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபைக்குள் நூல் நிலையம், பாதைகள் போடுதல், ஆஸ்பத்திரி திருத்தம் போன்ற சில புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கப் போவதர்க மட்டும் எழுதியிருந்தார்.

ஆனபடியால் விடுதலைப் புலிகள்உடனடியாக பதில்அனுப்பவில்லை. காரணம் திரு. பலபத்தபென்டியின் கடிதத்துக்கு பதில் வராததிஞல். நேற்று திடீரென்று திரு. பலபத்தபென்டியிடம் இருந்து கடிதம் வந்தது அது மிகவும் சுருக்கமான கடிதம். அந்தக் கடிதத்தில் விடுதலைப் புலிகள் எழுப்பிய எந்தவிதமான பிரச்னைக்கும் பதில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-ம-சி

## நரோமா சேவை நடைபெருது

(யாழ்ப்பாணம்)

நரோமாக்கப்பல் கடல் கொந்தளிப்புக் காரணமாகத் திருகோணமலையிலிருந்து புறப்படாதகாரணத்தால் பயணிகள் 27ம்தேதி இன்றுாலை பருததித்துறைத் துறைமுகத்துக்குச் செல்லவேண்டாம என்று யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் தெரிவித்துள்ளார்.

## நாலாம் கட்டப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் அடையுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த கட்டப் பேச்சுக்களிலும் திரு. பலபெத்தபென்டி தலைமையிலான குழுவே கலந்துகொள்ளும் எனவும், இக்குழுவில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சா கேணல் ரத்வத்த தெரிவித்துள்ளார். -சி

## லண்டன் பத்திரிகை

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் 'கட்அவுட்கள்' மிக உயர்ந்த அளவில் காணப்படுகின்றன.

கடந்த 12 வருடங்களாக ஒரு லட்சம் படையினரின் தாக்குதலுக்கு எதிராகபோரிட்டுவரும் விடுதலைப்பலிகள் வடக்கில் தமக்கென தனியான ஒரு தாயகத்தை அமைத்துக் கொண்டு விட்டார்கள்.

இழுத்தடிக்கும் நீண்ட உள்நாட்டுப்போர்களும், கெரில்லா போராட்டமும் மலிந்துவிட்ட நிலையில் விடுதலைப்புலிகளின் போராட்டம் வலுவுள்ளதாக பலனளிப்பதாக இருக்கின்றது.

1986ம் ஆண்டிலேயே பெண்போராளிகளும் போராட்டத்தில் குதித்துள்ளதை இலங்கை இராணுவம் கண்டது.

1990ம் ஆண்டு நவம்பர் மாதம் பெண்போராளிகள் அணியொன்றுபலாலிராணுவ முகாமை தாக்கி கடும் சேதத்தை உண்டாக்கியது.

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலிஞலேயே இலங்கை இராணுவம் பலத்த இழப்புக்களை சந்தித்தது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமைப்புக்களான ஹமாஸ், இஸ்லாமிய ஜிகாத் போன்ற அமைப்புக்களை விட தமிழர்களின் உயிர்த்தியாகம் அளப்பரியது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் போற்றுதற்குரிய தலைவஞக கொள்ளப்படுகிருர்.

சாவு என்பது தமிழர்களைப் பொறுத்தவகையில் மகிழ்ச்சியான பயணம் என்பதனை காட்டும் வகையில் வீரச்சாவடைந்தவர்களுக்கு உரிய மதிப்பைக்கொடுக்க விடுதலைப் புலிகள் தவறுவதில்லை எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (க-சி)

## இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டைந்ததிஞல் இந்தக் காலத்துக்குள் சந்திரிகா அரசை மதிப்பீடு செய்த போது எல்மோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: ஆரம்ப காலத்தில் யுத்தத்தை நிறுத்தி, அதஞல் கிடைக்கும் வருமானத்தை நாட்டின் அபிவிருத்திக்கு செலவழிக்கப் போவதாகக் கூறிஞர். ஆஞல் தற்போதைய நிலையை பார்த்தால் இனப்பிரச்னை தீர்வுச்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என மக்கள் மத்தியில் சந்தேகம் எழுகின்றது என்ருர்.

இதேவேளை ஜஞதிபதி சந்திரிகாவின் அரசு ஒரு யுத்த நிலைக்கே மீண்டும் நாட்டை இட்டுச் செல்வதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர், (ம-சி)

## பாண் உற்பத்தி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

(பாண்) உற்பத்தியில் ஈடுபடுவதில்லை யென்றும் வேறுவிதமாக மாவினைப் பெற்று ஏனைய உற்பத்திப் பொருட்களை தயாரிப்பதில்லையெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் அவசர கூட்டம் நேற்று நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து வெதுப்பக உரிமையாளர் சங்கம் விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு:

இதுவரை காலமும் புனர்வாழ்வு திணைக்களத்திஞல் எமக்கு வழங்கப்பட்ட 34 லோட் மாவை 40 லோட்டாக அதிகரித்து தருவதாக அரசாங்க அதிபர், யாழ். செயலகத்தில் 03-01-95 திகதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்ததை உறுதிப்படுத்தி 15-02-95 திகதியிடப்பட்ட கடிதத்திஞல் எதிர்வரும் சாலங்களில் தமது திணைக்களத்திஞல் இந்த மா வழங்கப்படுமென்பதை, உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருந்தார். ஆஞல், கடந்த இரண்டு வாரங்களில் எமக்கு கிடைக்கப்பெற வேண்டிய 80 லோட் மாவிற்குப்பதிலாக 40 லோட் மா கிடைத்ததிஞல் ஏற்பட்ட பற்ருக்குறையிஞல் 75 வீதமான அங்கத்தவர்கள் உற்பத்தியை நிறுத்தியுள்ளனர்.

அத்துடன் கடந்த 24-ம் திகதி யாழ். செயலகத்தில், அரச அதிபரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் மாவிநியோகம் சம்பந்தமாக நடந்த கருத்துப்பரிமாறலில் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி எமக்கு வழங்கப்படும் மாவை சங்கமும் அங்கத்தவர்களும் துஷ்பிரயோகம் செய்வதாக குற்றம் சாட்டிஞர். இதற்குரிய விளக்கத்தை எமது பிரதிநிதிகள் சபையில் கூறியும் அதனை அங்கீகரிக்காத நிலையில் வெளிநடப்பு செய்தார்கள். இவ்விடயங்கள் சம்பந்தமாக ஆராய நேற்று கூடிய அவசரகூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தார் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/D-